
மாலை முரசு

பக்கங்கள் 17

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 29 சனிக்கிழமை 18.11.2023 அதிர்வு 110

## நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு மாலைதீவுக் குச் சென்றிருந்த ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியுள்ளார். 04

## பற்றைக்குள் இருந்து ஆணின் சடலம் மீட்பு

- ந.லோகதயாளன் -

யாழ்ப்பாணம், பொன்னாலை சந் திக்குச் சமீபமாக வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் உள்ள பற்றைக்குள் இருந்து நடுத்தர 04

## நீச்சல் தடாகத்தில் மூழ்கி சிறுமி சாவு

ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத் தில் விழுந்து 6 வயது சிறுமி உயிரிழந் துள்ளார் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

பதுரலிய, இலுக்பொத்தவில் 04

## மனைவி தாக்கி கணவன் மரணம்

குடும்பத் தகராறு காரணமாகத் தனது கணவரை மனைவி கிரிக்கெட் மட்டையால் தாக்கிக் கொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் திஸ்ஸமஹாராம பகுதி யில் இடம்பெற்றுள்ளது என்று 04

# நவம்பர் 27ஆம் திகதி வருகிறார் துவாரகா

## செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால் உயிர்ப்பிப்பு;

## இலங்கைக்கு சர்வதேச புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை

செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தின் மூலம் தமிழீழ விடு தலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனின் மகள் துவா ரகா இன்னும் உயிருடன் இருக் கின்றார் எனக் காண்பிப்பதற்கான காணொலியொன்றை வெளியிடுவ தற்கான முயற்சிகள் இடம்பெறு கின்றன என்று வெளிநாட்டுப் புல னாய்வு அமைப்புகள், இலங்கைப் புலனாய்வுப் பிரிவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.


மாவீரர் தினத்தை முன்னிட்டு ஒரு குழுவினர் நவம்பர் 27 ஆம் திகதியன்று இந்தக் காணொலியை வெளியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும், இதற்காக விடுதலைப் புலிகளின் தலைவரின் உறவினர்களின் அனுமதி பெறப் பட்டுள்ளது என்றும் இலங்கைப் புலனாய்வுப் பிரிவினருக்கு வெளி நாட்டுப் புலனாய்வு அமைப்புக ளால் தெரிவிக்கப்பட்டுள்ளது எனக் கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. 04



## இந்திய மீனவர்கள் 22 பேர் பருத்தித்துறையில் கைது!

- ந.லோகதயாளன் -


யாழ்ப்பாணம், பருத்தித்துறை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 22 பேர் இன்று மதியம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 04



## கோப் குழுவின் தலைவருக்கு எதிராக வருகிறது பிரேரணை

அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழுவின் தலைவர் நாடா ளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவின் செயற்பாடுகளைக் கண் டித்து அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

அந்த நம்பிக்கையில்லாப் 04



## கோர விபத்தில் மருதமுனை இளைஞர்கள் இருவர் பலி!

### பிரதேசம் முழுவதும் சோகத்தில்

(எம்.எப்.நவாஸ், அஸ்ஹர் ஆதம்)

அம்பாறை, மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு இளை ஞர்கள் ஒலுவில் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச்செய்திமுழுமருதமுனைபிரதேசத்தையும்சோகத்தில்ஆழ்த்தி யுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று மாலை மருதமுனையில் இருந்து ஒலுவில் 04





# இலங்கையின் கல்வியை டிஜிட்டல் மயமாக்கத் திட்டம்!

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

இலங்கையில் பாடசாலைக் கல்வியை டிஜிட்டல் மயமாக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்–

2024 இற்கான புத்தங்கள் தற்போது அச்சிடப்பட்டுள்ளன. சீருடைகள் அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்கப்படும்.

கொவிட் பரவலின் பின்னரான காலத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் காரணமாக ஆரம்ப கல்வி நெருக்கடிகளை சந்திப்பதாக கல்வி நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கிறோம்.

பாடசாலை கல்வியை டிஜிட்டல் மயமாக்க எதிர்பார்க்கிறோம். உலகம் தொழில் நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்லும் போது நமது பிள்ளைகளின் கல்வித் தேவையைத் தாமதப்படுத்த முடியாது. அதற்கு அவசியமான கல்வி மறுசீரமைப்புக்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

யுனெஸ்கோவுடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு



உதவிகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். யார் கல்வி அமைச்சராக இருந்தாலும் 4 வருடங்களுக்குள் அந்த உதவிகள் நாட்டுக்கு கிடைக்கும்.– என்றார்.

# எட்டு லட்சம் மாணவர்களுக்கு இலவச காலணி வழங்கத் திட்டம்

இலங்கைப் பாடசாலைகளில் கல்வி கற்கும் 8 லட்சம் மாணவர்களுக்கு இலவச காலணிகள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (17) விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டம் எதிர்வரும் ஆண்டுகளில் முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர் கூறியுள்ளார்.

அமைச்சரவையின் அங்கீகாரமும், திறைசேரியின் ஆதரவும் கிடைத்துள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக்காக வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

# இலங்கைக்கு வருகை தரவுள்ளது உலகின் மிகப்பெரிய சுற்றுலா கப்பல்

உலகின் மிகப்பெரிய சுற்றுலா கப்பல் இலங்கைக்கு வருகை தரவுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தக் கப்பல் நாளை (19) இலங்கையை வந்தடையவுள்ளது என்று துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் உல்லாச பயணத் துறையை ஊக்குவிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் இலங்கைக்கு இந்த கப்பல் வருகைதரவுள்ளது.



இந்தக் கப்பல், 19ஆம் 20ஆம் திகதிகளில் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உல்லாச பயண துறையில் ஈடுபட்டு வரும் பிரபல நிறுவனமான 'யாரா குளோபல்' தனியார் நிறுவனத் தலைவர் எச். எம். நியால்டீன் இந்தக் கப்பலுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கப்பலில் வரும் உல்லாச பயணிகள் இலங்கையின் சுற்றுலாத் தளங்களைப் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் உற்பத்தி செய்யும் பொருள்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான கலந்துரையாடலும் உல்லாச பயணிகளோடு மேற்கொள்ளப்பட உள்ளது என்று தெரிய வருகிறது.



# ஆசிரியர்கள் இருவரது இடமாற்றத்தை நிறுத்துமாறு கோரி மகஜர் கையளிப்பு!

## தெல்லிப்பழை மகாஜனா அதிபரிடம் பெற்றோர் வழங்கினர்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் ஆசிரியர்கள் இருவரது இடமாற்றத்தை நிறுத்துமாறு கோரி பெற்றோரால் அதிபரிடம் மகஜரொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றத்தை இரத்துச் செய்து நல்லதொரு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக ஆளுநர், அமைச்சர் ஆகியோரை மீண்டும் நாடி விரைவான நடவடிக்கை எடுக்குமாறு அதிபரிடம் கோரப்பட்டுள்ளது.

கையளிக்கப்பட்ட மகஜரில், எமது கல்லூரியில் 55 வயதைக் கடந்து கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. 55 வயதைக் கடந்த ஆசிரியர்களுக்கு சட்டப்படி இடமாற்றம் வழங்கப்படுவதில்லை.

இவர்கள் இருவரும் மாணவர்களின் ஒழுக்க நடவடிக்கையில் அக்கறையுடைய ஆசிரியர்களாகவும் திகழ்கின்றனர். மேலும் பாடசாலையின் முன்னேற்றத்துக்குப் பக்கபலமாக இருந்து செயற்படும் இவர்கள் கட்டாயம் எமது பாடசாலையில் சேவையாற்ற வேண்டியவர்கள்.

இந்த விடயம் தொடர்பாக பாடசாலைச் சமூகம் பல நடவடிக்கைகளைச் செய்தது. வடமாகாண ஆளுநரின் சிபார்சுக்கு அமைவாக இந்த இடமாற்றம் பிற்போடப்பட்டிருந்தமையை அறிந்தோம்.

மீண்டும் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என்ற பிரச்சினை தோன்றியுள்ளது. இந்த நிலையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு அமைச்சரான கடற்றொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவை நாடியிருந்தது. இன்னும் உறுதியான முடிவு கிடைக்கவில்லை. இந்தப் பிரச்சினையை அமைச்சரே தீர்த்துவைப்பார்.

எனவே, அதிபர் ஆகிய நீங்கள் இந்த இடமாற்றத்தை மீண்டும் இரத்துச் செய்து நல்லதொரு தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காக ஆளுநர், அமைச்சர் ஆகியோரை மீண்டும் நாடி விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு தங்களை பெற்றோர்களாகிய நாம் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.– என்றுள்ளது.

# பஸ்களில் கைபேசிகள் திருடிய சந்தேகத்தில் மூன்று பேர் கைது!

## யாழ். குற்றத் தடுப்பு பொலிஸாரால் அதிரடி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பஸ்களில் பயணம் செய்பவர்களை இலக்கு வைத்து கையடக்க தொலைபேசி திருட்டில் ஈடுபட்டு வந்த 3 பேர் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு பொலிஸாரால் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது இவர்களிடமிருந்து 4 லட்சம் ரூபா பெறுமதியான 8 கையடக்க தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

பஸ்களில் பயணம் செய்பவர்களின் தொலைபேசிகள் திருட்டுப் போவது சம்பந்தமாகத் தொடர்ச்சியான முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வந்த நிலையில், யாழ்ப்பாண குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி இந்திக்க தலைமையிலான குழுவினர் மூன்று நபர்களைக் கைது செய்தனர்.



யாழ். நகரை அண்டிய வண்ணார் பண்ணை, பிரப்பங்குளம் சிவலிங்க புளியடியை சேர்ந்த 24, 31, 33 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸார் சந்தேக நபர்களிடம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கோப் குழுவின்...**

பிரேரணை அடுத்த வாரத்தில் சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் 132ஆம் சரத்தின் பிரகாரம் கோப் குழுவின் தலைவரை, அந்தக் குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவுக்கு அமைய அந்தப் பதவியிலிருந்து நீக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களால், கோப் குழுத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

அண்மையில், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகள் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்ட போது, கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார எம்.பி. செயற்பட்ட விதம் தொடர்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மனைவி தாக்கி...**

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியுள்ளது. இதன்போது, மனைவி தனது கணவரைக் கிரிக்கெட் மட்டையால் தாக்கியுள்ளார்.

சம்பவத்தில் தலையில் படுகாயமடைந்த கணவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

47 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

கொலையுடன் தொடர்புடைய 42 வயதுடைய உயிரிழந்தவரின் மனைவி திஸ்ஸமஹாராம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

**இந்திய மீனவர்கள்...**

இந்தியாவின் தமிழகம் - பாம்பன் பகுதியில் இருந்து இரண்டு படகுகளில் வந்து மீன்பிடியில் ஈடுபட்ட 22 பேரையும் படகுகளுடன் கடற்படையினர் கைது செய்தனர்.

இவ்வாறு கைதான அனைவரும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்கள் நாளை காலை யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

**நீச்சல் தடாகத்தில்...**

உள்ள ஹோட்டல் ஒன்றில் பெற்றோருடன் ஓய்வெடுக்க வந்த வேளையில் நேற்று நீச்சல் தடாகத்தில் மூழ்கிய நிலையில் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

வெலிவேரிய, அம்பரல்வ வடக்கு பகுதியைச் சேர்ந்த தனேஷி ஆருத்யா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுரலிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**பற்றைக்குள் இருந்து...**

வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்து சில நாள்கள் கடந்திருக்கலாம் எனக் கருதப்படும் அந்தச் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்துப் பொலிஸார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

**நாடு திரும்பினார்...**

எதிஹாட் விமான சேவைக்குச் சொந்தமான ஈ.வை. 728 என்ற விமானத்தில் அவர் இன்று முற்பகல் 9.37 மணிக்குக் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

மாலைதீவின் புதிய ஜனாதிபதி மொஹமட் முய்சுவின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்றுமுன்தினம் மாலைத்தீவுக்குச் சென்றிருந்தார்.

**நவம்பர் 27ஆம் திகதி...**

இந்தக் காணொலியைப் பயன்படுத்தி நோர்வேயில் உள்ள விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்புக்கு நிதியைத் திரட்டத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் இலங்கைப் புலனாய்வுப் பிரிவுக்கு வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

நெடியவன் என்கின்ற பேரிம்பநாயகம், நோர்வேயில் இருந்து விடுதலைப் புலிகள் அமைப்பை மீள் உருவாக்கும் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ள போதிலும் புலனாய்வு அமைப்புகள் அந்த முயற்சிகளை முறியடித்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன எனவும் அந்த ஆங்கிலப் பத்திரிகையின் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கோர விபத்தில்...**

பிரதேசத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்களும் மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் சம்பவ இடத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றவர் கல்முனை அஷ்ரப் ஞாபகத்த வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர்கள் 19 வயது இளைஞர்கள் என்பதுடன் இவர்கள் இம்முறை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதுவதற்குத் தயாராக இருந்த மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மருதமுனை, ஸம்ஸம் வீதியைச் சேர்ந்த றிபாய் முஹம்மட் அமர் அவுஸ் (வயது 19), மருதமுனை பிரதான வீதியைச் சேர்ந்த ஸமீம் அதான் மிப்ரித் (வயது 19) ஆகிய இரு இளைஞர்களுமே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

இளைஞர்களின் உடல்கள், மரண விசாரணை அறிக்கையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு, மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்மா பள்ளிவாசலில் தொழுகை நடாத்தப்பட்டு இன்று காலை 7 மணிக்கு மருதமுனை மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டன. இதில் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.





# நிலநடுக்கம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துதல் அவசியம்

## கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் அறிவுறுத்து



(எம்.எம்.றம்ஸீன்)

நிலநடுக்கம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துமாறு கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட செயலாளர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின் போது அறிவுறுத்தியுள்ளார். இது தொடர்பாக கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களினுடைய செயலாளர்களுக்கும் அறிவித்துல் வழுங்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் அண்மைக் காலமாக ஏற்பட்டுவரும் நிலநடுக்கம் தொடர்பிலும் அதனை எதிர் கொள்ளக் கூடிய வகையில் மாணவர்கள் உட்பட ஏனைய தரப்பினரையும் தயார்ப்படுத்த வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் நிகழ்ச்சிகளை நடத்துதல் அவசியம்.

அண்மைக் காலமாகத் திருகோணமலையில் இடம்பெற்று வரும் நிலநடுக்கம் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டு அது தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழக புவியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர். கிருபராஜா கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டு வருகின்ற நில நடுக்கம் தொடர்பாகவும் அதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாகவும் கிழக்கு ஆளுநருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

இந்த நிலையிலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு செயலக உத்தியோகத்தருக்கு ஆசியப் போட்டியில் வெண்கலப் பதக்கம்!

(பழுவூரான்)

ஆசிய மெய்வன்மைப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்த மட்டக்களப்பு செயலக விளையாட்டு பயிற்றுனராக கடமையாற்றும் பஞ்சாட்சரம் ஜெயக்குமாருக்கு கௌரவம் வழங்கும் நிகழ்வு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (17) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீ காந்த் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

பிலிப்பைன்ஸ் நியுகிலார்க் சிற்றியில் 22 ஆவது தடவையாக இடம் பெற்ற ஆசிய மெய்வன்மைப் போட்டியில் 55 வயது முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்று எமது நாட்டுக்கும் மாவட்டத்துக்கும் பெருமை தேடித்தந்துள்ளார்.

கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் 2.3 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

இலங்கையிலிருந்து 147 வீர, வீராங்கனைகள் பங்கு பற்றியதில் 84 பதக்கங்கள் இலங்கைக்குக் கிடைத்துள்ளன.

25 பேர் தங்கப் பதக்கத்தையும் 34 பேர் வெள்ளிப்பதக்கத்தையும் 25 பேர் வெண்கலப் பதக்கத்தையும் பெற்று இலங்கை அணி 8 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



(த.சுபேசன்)

சுன்னாகம் றோட்டரிக் கழகத்தின் முன்னாள் தலைவரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தருமான நவரட்ணம் தேவரூபன் அண்மையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதி நிலை நாட்டப்படுகின்றதா?

உயர்நீதிமன்றத்தில் ஒரு நீதியரசர் பதவிக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசரை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி இருக்கும் பரிந்துரையை அங்கீகரிப்பதா என்ற சர்ச்சை அரசமைப்புக் கவுன்ஸிலில் எழுந்துள்ள சூழலில் இன்றைய கருத்தியல் இங்கு வெளியாகுகின்றது.

இந்த விடயத்தை ஒட்டித் தீர்மானிப்பதற்காக நேற்றுக் கூடிய அரசமைப்பு கவுன்ஸில் ஒரு முடிவுக்கு வராத நிலையில், இன்று அதே விடயத்துக்காக மீண்டும் கூடுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் மிக மோசமான குற்றச்சாட்டுக்கள், நாடாளுமன்றச் சிறப்புரிமைகள் என்ற காப்பரணுக்குப் பின்னால் நின்று முன்வைக்கப்பட்டிருக்கையில், அவருக்கு இலங்கையின் உச்சநீதிமன்றமான உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் பதவியுயர்வுக்குஜனாதிபதிபரிந்துரைத்திருக்கின்றமை சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கின்றது.

"உயர் நீதிமன்றங்களுக்கான நியமனங்களில் தகுதியும் நேர்மையும் மிக முக்கியமான அம்சங்கள். பிரதம நீதியரசருடன் கலந்தாலோசித்து, அரசமைப்புக் கவுன்ஸிலினால் அங்கீகரிக்கப்படும் ஜனாதிபதியின் இத்தகைய நியமனங்கள் வெறும் சிரேஷ்ட அல்லது மூப்புத் தன்மையில் அமையக்கூடாது, அவற்றை எல்லாம் தாண்டி, தகுதியும் நேர்மைத் தன்மையும் முக்கிய பண்புகளாக அமைய வேண்டும்" - இப்படி மூத்த பல சட்டத்தரணிகளைக் கொண்ட கட்டமைப்பான 'சட்டத்தரணிகள் ஒன்றிப்பு' தெரிவித்துள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதித்துறை அலுவலகப் பதவியை துஷ்பிரயோகம் செய்தார் என்று நாடாளுமன்றத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரோஷான் ரணசிங்க கடந்து எட்டாம் தேதி சுமத்திய குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை ஒன்றையும் அந்த அமைப்பு வலியுறுத்தி இருக்கின்றமை இங்கு அவதானிக்கப்பட வேண்டும்.

ஒரு முக்கிய நீதித்துறைப் பதவியின் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டு நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற அடிப்படையில் வெறும் உரையுடன் அப்படியே விட்டுவிட்டு செல்லப்படக் கூடாதது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம்தான்.

'சட்டத்தரணிகள் ஒன்றிப்பு' அமைப்பு குறிப்பிடுகின்றமையைப் போல இந்தக் குற்றச்சாட்டுகளின் செல்லுபடித் தன்மையைத் தீர்மானிப்பதற்கு விரைவான, வெளிப்படையான மற்றும் வலுவான நடவடிக்கைகள் அவசியமானவை.

ஒரு நீதித்துறை உயர் அலுவலர் தொடர்பில் நாட்டின் உயர் சபையான நாடாளுமன்றத்திலேயே வெளிப்படையாக - அப்பட்டமாக - பல மோசமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கையில், அவை குறித்து நீதி, நியாயமான - ஏற்றுக் கொள்ளத்தக்க - வெளிப்படையான - விசாரணை ஒன்று நடத்தப்படாமல், அக்குகுற்றச்சாட்டுகளைப் புறமொதுக்கியபடி, அந்த அலுவலருக்குப் பதவி உயர்வு நிலையை அளிப்பது அந்த நியமனத்துக்கு அரசியல் சாயும் பூசும் நடவடிக்கையாகவே அர்த்தப்படுத்தப்படும்.

ஆகவே திரும்பவும் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். 'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.'

இந்த உயர் நீதிமன்ற நீதியரசர் நியமனத்தில் நீதி நிலைநாட்டப்படுகின்றதோ, இல்லையோ நீதி நிலைநாட்டப்படுவதாக இதுவரை காட்டப்படவில்லை என்பது மட்டும் நிஜம்.

சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இந்தக் குறைபாட்டை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# மாணவனைக் காணவில்லை!

(அப்துல்சலாம் யாசீம் )

காணாமல் போன பாடசாலை மாணவனை தேடித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கஹடகஸ்திகிலிய-ஹெட்டுவெவ மஹபொத்தான பகுதியைச் சேர்ந்த ரஹ்மான் ஆதிப் என்ற பாடசாலை மாணவனே் காணாமல் போயுள்ளார்.

குருநாகல்-கெகுனுகொல்ல தேசிய பாடசாலை விடுதியில் தங்கி இருந்த போது கொழும்பு நோக்கி சென்றுள்ளதாகவும், நேற்று முன்தினம் 16 ஆம் திகதி வாழைத்தோட்டம், புதுக்கடை பகுதியில் நடமாடி திரிந்ததாகவும் தகவல் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் தொடர்பில் தகவல் தெரிந்தால் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது 0771190530, 0718227451, 0770883842, 0775020282 ஆகிய இலக்கங்களுக்கோ தெரியப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை."

சார்ள்ஸ் டார்வின்
(பரிணாமவியலின் தந்தை)







# போசனை விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கே. எ. ஹமீட்)

ஒலுவில் அல்-மதீனா வித்யாலயத்தில் ஒலுவில் ஆயுள் வேத வைத்தியசாலை டாக்டர் பஸ்மினாவால் உணவும் போசனையும் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது. நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# தரமுயர்த்தப்பட்ட பொத்துவில் டிப்போ வைபவரீதியாக நாளை திறந்து வைப்பு!

(கே. எ. ஹமீட்)

பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. தரமுயர்த்தப்பட்டுள்ள டிப்போவைத் திறந்து வைக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரபின் பெரும் முயற்சியால் இது தரமுயர்த்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரபின் அழைப்பின் பேரில் பிரதம அதிதிகளாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் கலந்து கொண்டு பிரதான பஸ் டிப்போவை திறந்து வைக்கவுள்ளனர்.

கௌரவ அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டபிள்யூ. டி. வீரசிங்க, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ், தேசிய அபிவிருத்தி மற்றும் கட்டுமானக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் குசான் தேவிந்தா ஆகியோர் கலந்து கொள்வர்.

பொத்துவில் உப பஸ் டிப்போவைப் பிரதான டிப்போவாகத் தரமுயர்த்துவதற்கான தீர்மானம் கடந்த வருடம் அமைச்சு மட்டத்தில் எட்டப்பட்டிருந்தது.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை காரணமாகப் பொத்துவில் பஸ் டிப்போவில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திக்கென பணம் ஒதுக்குவதில் பல சிரமங்கள் காணப்பட்டன.

குறித்த காலப் பகுதியில் பொத்துவில் பஸ் டிப்போ அமைந்துள்ள நிலத்தின் சட்ட ரீதியான உரிமை மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் மேற்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாக பஸ் டிப்போவுக்காக உரிமம் சட்ட ரீதியாக வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான முதற்கட்ட நிதியாக சுமார் 60 மில்லியன் ரூபாவை அரசு வழங்கியிருந்தது.



# கல்முனை மாணவர்களின் சிறுவர் சந்தை

(எம்.எம்.றம்ஸீன்)

மாணவர்களின் கணிதபாட அறிவை மேம்படுத்தும் வகையில் கல்முனை அல் பஹ்றியா தேசிய பாடசாலை தரம் இரண்டு மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சிறுவர் சந்தை பாடசாலையின் முதல்வர் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு அதிதிகளாக கல்முனை கல்வி வலய ஆரம்ப பிரிவு உதவி கல்வி பணிப்பாளர் ஏ.எல்.எம். ஜஹறாங்கிர், ஆரம்ப பிரிவு ஆசிரிய ஆலோசகர் வை.ஏ.கே.தாஸிம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ஏ.சலாம், திருமதி ஈ.றினோஸ் ஹஜ்மின் ஆரம்பப் பிரிவு பகுதி தலைவர் ஏ.ஸி.எம்.நளீம், பாடசாலை ஒழுக்காற்று குழுத் தலைவர் எம்.பி.எம். லாபீர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# மார்கழி இசை விழாவும் கண்காட்சியும் டிசெம்பர் இறுதியில் மூன்று நாள்கள்!

## யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வட மாகாணத்தைச் சேர்ந்த சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்திக் கண்காட்சியும் மார்கழி இசை விழாவும் டிசெம்பர் மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளன என்று யாழ். வணிகர் கழக தலைவர் தெரிவித்தார்

யாழ்ப்பாண வணிக கழகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர் ஆர். ஜெயசேகரன் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுடைய கலை கலாச்சார பண்பாடுகளை பாதுகாக்கும் நோக்கத்துடனும் தமிழர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் மார்கழி இசை விழாவும் வட மாகாணத்தைச் சேர்ந்த சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்தி கண்காட்சியும் நடத்தப்படவுள்ளன.




டிசெம்பர் மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலைய உட்புற மண்டபத்தில் இசை விழாவும் வெளிப்புற திடலில் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளன.

வெளிநாட்டு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இலங்கை ஏற்றுமதி அதிகார சபை மற்றும் ஏற்றுமதி துறை சார்ந்த பல அனுபவம் வாய்ந்த ஏற்றுமதியாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டு சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்திகளுக்கு தேவையான இயந்திரங்கள், புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய இயந்திரங்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்தவும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நிகழ்வுகளில் பொது மக்கள் பங்குபற்றி பயன்பெற முடியும். நிகழ்வுகளில் யாழ். மாவட்டம் மாத்திரமல்லாது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பங்குபற்ற முடியும்.– என்றார்.





# கிளி. மகா வித்தியாலய அதிபருக்கு மணிவிழா!

கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கத்தின் மணிவிழா நிகழ்வு வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வு பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் வைத்தியர் குகராஜா தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாட்டைத் தொடர்ந்து, மணிவிழா நாயகி மலர் மாலை அணிவித்து பாடசாலை மண்டபத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர். தொடர்ந்து வாழ்த்துரைகளும், கௌரவிப்புகளுடம் இடம்பெற்றன.

மணிவிழா நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும், பாடசாலையின் முன்னாள் அதிபருமான சி.சிறிதரன், மாவட்ட அரச அதிபர் றூபதவி கேதீஸ்வரன், முன்னாள் கல்வி அமைச்சரும் வடமாகாண கல்வி அமைச்சருமான குருகுலராஜா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.





# விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

(நூருல் ஹுதா உமர் )

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம் எனும் செயற்றிட்டத்தின் கீழ் அல் ஹாஜ் கலீல் முஸ்தபாவால் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நிகழ்வு மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல். முக்தாரால் முன்னெடுக்கப்படுகிறது.

இது தொடர்பாக மருதமுனை 'மரு கெபிட்டல்' விளையாட்டு கழகம் மற்றும் 'பர்வின் ரெடிங்', 'லதான் அக்ரோ இன்டர்நேஷனல்' ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்-ஹாஜ் கலீல் முஸ்தபவுடனான கலந்துரையாடல் மருதமுனை பிரதான வீதி முஸ்தபா கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதன் போது மருதமுனை 'மரு கெப்பிட்டல்' விளையாட்டு கழகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் மற்றும் கழகக் கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால உதவிகள் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.





# வள்ளுவர் திறன் வகுப்பறை திறப்பு

நுவரெலியா மாவட்டத்தில் இராகலை நகரில் டெல்மார் பிரதேசம் அமையப் பெற்றுள்ளது. கல்வியில் காணப்பட்ட பின்னடைவு நிலையை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த ஊரில் கல்வி கற்று பல்கலைக்கழகம் மற்றும் கல்வியில் கல்லூரிகளுக்கு தெரிவான மாணவ மாணவிகளால் சேர்ந்து உருவாக்கப்பட்ட அமைப்பே வள்ளுவர் கல்வி அபிவிருத்தி மன்றம் ஆகும்.

வள்ளுவர் கல்வி அபிவிருத்தி மன்றமானது கடந்த 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் பல செயற்பாடுகளில் ஒன்றாக டெல்மார் பிரதேசத்துக்கான திறன் வகுப்பறை உருவாக்கப்பட்டுள்ளது.

திறன் வகுப்பறையானது மாணவர்களுக்கு இன்றைய கால கட்டத்தில் மிகவும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

இது மாணவர்களின் இணையவழி கற்றல் நடவடிக்கைகளுக்கும் மாணவர்களின் தேடல்களுக்கும் மிகப் பயனுடையதாக காணப்படும் என்ற நோக்கத்தோடு வள்ளுவர் திறன் வகுப்பறை திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வலப்பனை கோட்டக் கல்வி பணிப்பாளர் யோகராஜா விசேட அதிதியாக கலந்து கொண்டார்.





# மருதமுனை கடற்கரையில் உள்ள கோபுரத்தை பாதுகாக்க நடவடிக்கை!



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட மருதமுனை பிரதேசத்துக்கு அடையாள மாக திகழும் கடற்கரை பகுதியில் அமைந் துள்ள கோபுரத்தை கடலரிப்பில் இருந்து பாதுகாப்பதற்கான முன்னேற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய அந்தப் பகுதிக்குக் கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலி உட்பட கரையோரங்கள் பேணல் பாதுகாப்பு திணைக்கள பொறி யியலாளர் துளசிதாசன் கரையோரங்கள் பேணல் பாதுகாப்பு திணைக்கள உத்தி யோகத்தர் எம்.எஸ். அஹமட் மஹ்ருப் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

மருதமுனை பிரதேசத்துக்கு அடையாளமாகத் திகழும் கோபுரப் பகுதியில் கடந்த 2022 ஆண்டு கடலரிப்பு ஏற்பட்டிருந்தது. அந்த நேரம் இந்தப் பகுதி மக்களாலும் கரையோரங் கள் பேணல் திணைக்களத்தாலும் கடலரிப்பை தடுப்பதற்குத் தற்காலிகமாக உரப்பை கொண்டு தற்காலிக அணைக் கட்டு அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது.

ஆனால் இவ்வாண்டு கடலரிப்பு அகோரமாக இருப்பதால் இந்தப் பிரச் சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு எமது திணைக்களத்தின் முழுமையான உதவியுடன் கல்முனை பிரதேசசெயலாளரின்வேண்டுகோளுக்க இணங்க இத்திட்டமானது 1.7 மில்லியன் செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் நிரந்திரமான தீர்வுக்கு வழி கோலும் என்று கரையோரப் பாது காப்பு திணைக்களத்தின் பொறியிய லாளர் தெரிவித்தார்.

மருதமுனைப் பிரதேசத்துக்கு அடை யாளமான கோபுரமானது கடந்த வருட மும் கடலரிப்பால் பாதிப்புற இருந்த போதிலும் தற்காலிகமாக மண்மூடை களை கொண்டு கடலரிப்பினை கரை யோரம் பேணல் திணைக்கள உதவியு டன் மேற்கொண்டோம். கடந்த காலங்க ளில் எம்மால் விடுக்கப்பட்டு வேண்டு கோளுக்கு அமைய இந்தத் திட்டம் நிரந்திர தீர்வாக முன்னெடுக்கப்படுகின் றது. அதற்காக நன்றிகளை சம்பந்தப் பட்டவர்களுக்கு பிரதேச செயலாளர் என்ற ரீதியில் தெரிவிக்க விரும்புகின் றேன். இது தவிர மருதமுனையின் அடையாளம் மாத்திரமல்ல. ஏனைய பகுதி மக்கள் வந்து செல்லும் சுற்றுலாத் தளமாக விளங்கும் இக்கடற்கரை பிரதேசம் மேலும் அழகூட்டப்படவுள்ளது என்று பிரதேச செயலாளர் குறிப்பிட்டார்.



# பல்சமய சிறுவர் கழகம் அங்குரார்ப்பணம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சிறுவர்களின் ஆளுமை விருத்தி மற்றும் உடல், உள ஆரோக்கியத்தை வலுப்படுத்தும் நோக்கில் வாழைச் சேனை, யூனியன் காலனியில் பல சமய சிறுவர் கழகம் திறந்து வைக்கப் பட்டது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வாழைச்சேனை சேகரத்தின் முகாமைக் குரு அருட்கலாநிதி கே.எஸ்.நிஸாந்தன் தலைமையில் நிகழ்வு சர்வமத பிரார்த் தனைகளுடன் இடம்பெற்றது.

பல்சமய சிறுவர் கழகத்தில் நூலகம், விளையாட்டு நிகழ்வுகள், சிறுவர்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள், இனங்களுக்கிடையிலான கலை, பண்பாட்டு ரீதியிலான நிகழ்வுகள், சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் என்பன இடம்பெறும் வகையில் ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் இலங்கை தேசிய கிருஸ்தவ மன்றத்தின் பொதுச் செயலா ளர் அருட்பணி சுஜிதர் சிவநாயகம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங் களை வழங்கினார்.





# தரம் 5 புலமைப் பரிசிலில் கல்முனையில் முதலிடம்!

(எம்.எப்.நவாஸ் )

அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் இம்முறை வெளி வந்த புலமைப்பரிசில் முடிவின் பிகாரம் டாக்டர் முகம்மது அனஸ் ஆசிரியை சினிஸ் தம்பதிகளின் புதல்வி பர்ஹத் பாத்திமா 190 புள்ளிகளை பெற்று அக்கரைப்பற்று வலயத்திலும் கல் முனை மாவட்டத்திலும் முதலிடத்தில் சாதனை பெற்றுள்ளார்.

பாடசாலை அதிபர் நஜீமா ஹாறுத் தீன் தலைமையில் நேற்று (17) நடை பெற்ற பாராட்டு விழாவில் வலயக் கல் விப் பணிப்பாளர் ஏ.எம்.றகுமத்துள் ளாஹ், ஆரம்பப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ. எம்.ஹசீன், பிரதி அதிபர் அபூஅஸ்ரப், வலயத் தலைவர் சீ.எஸ்.முஸம்மில், வகுப்பாசிரியர் ஏ.எப்.ஜியாதா, ஏனைய வலயக்கல்வி உத்தியோகத்தர்கள், ஏனைய பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர்.



# போதை விழிப்புணர்வு நிகழ்வு

(எஸ்.கீதபொன்கலன், ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நீதி மன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள, போதைவஸ்து தொடர்பான குற்றங்க ளில் ஈடுபட்டவர்களுக்கான ,போதைப் பொருள் பாவனை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வானது கந்த ளாய் நீதிவான் நீதிமன்றத்தில் இயங் கும் பிராந்திய சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

போதை பாவனையில் இருந்து விடுபடுவதற்கான உளவளத்துணை செயற்பாடுகள், போதைப் பாவனையால் ஏற்படும் உடல் உள ரீதியான தாக்கங் கள், இதனால் ஏற்படும் சமூக சீர்கேடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர் பில் வளவாளர்களால் விழிப்புணர்வுக் கருத்துக்கள் இதன்போது வழங்கப்பட்டன.

தம்பலகாமம், கந்தளாய், கிண் ணியா ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் இந்தச் செயலமர்வில் கலந்து கொண் டனர்.

இந்த நிகழ்வில் கப்பல்துறை ஆயுள்வேத வைத்தியசாலையின் சிரேஷ்ட பதிவாளரும் வைத்தியருமான சாஸ்வதா சிவபதிஸ், வைத்தியர் ஆர். எம்.மல்சா ஜெயரட்ண ஆகியோர் வளவாளரகளாக கலந்து கொண்டனர்.

இந்த விழிப்புணர்வுச் செயலமர்வில் திருகோணமலை மாவட்ட பிராந்திய சமுதாயம்சார் சீர்திருத்த உத்தியோகத் தரும் பொறுப்பதிகாரியுமான எம்.எச். முபாரக், சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன், சமுதாயம் சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஹம் சபாலன், சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# உயர்தரம் கற்க புலமைப்பரிசில்

(எஸ்.கீதபொன்கலன்)

கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ. சாதாரணதரப் பரீட்சையில் திருகோண மலை மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற திருகோணமலை கோணேஸ் வரா இந்துக்கல்லூரியை சேர்ந்த யசோதரன் மிதுலாசனுக்கு கல்வி அமைச்சு டயலொக் நிறுவனத்தின் இணை அனுசரணையுடன் உயர்தரம் கற்கும் காலத்துக்கான புலமைப் பரிசிலை வழங்கியுள்ளது.

இந்த மாணவன் கடந்த காலத்தில் நாடாளாவிய சிதம்பரா கணிதப் பரீட் சையிலும் தனது வயதுப் பிரிவில் முதலிடம் பெற்று ஐக்கிய இராட்சியத் துக்கான இலவச புலமைப் பரிசிலை யும் பெற்று ஐக்கிய இராட்சியம் சென்று தான் கற்ற கல்லூரிக்கும் திருகோணமலை மாவட்டத்துக்கும் புகழ் தேடிக் கொடுத்துள்ளார்.




வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VANRENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882

# மாறிவரும் உலகில் கல்வி மட்டுமல்ல தொழில் தகைமையும் அவசியமானது

## வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டு

(த.சுபேசன்)

மாறிவரும் உலகுக்கு ஏற்ப அனைவரும் கல்வித் தகைமையோடு தொழில் தகைமையையும் கொண்டிருக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது பாடசாலை மாணவர்கள் கல்வியை இடை நடுவே கைவிடும் நிலை அதிகம் காணப்படுகிறது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதம செயலாளர் எனக்கு அண்மையில், வடமாகாணத்தில் 780 மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர் என்று தெரிவித்தனர். ஆனால் மீள் அறிக்கையிடலின் படி தற்போது 611 மாணவர்கள் பாடசாலையை இடைநிறுத்



தியுள்ளனர் . ஏனையவர்கள் பாடசாலைக் கல்வியை தொடர்கிறார்கள் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதேபோன்று க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோல்வி கண்டவர்கள், உயர் தரப் பரீட்சையில் சித்தியடையாதவர்கள், பல்கலைக்கழக கல்வியை கற்க முடியாதவர்கள் என பல்வேறு தரப்பினரும் வருடாந்தம் எமது இளைஞர் தொகைக்குள் சேர்க்கப்படுகின்றனர்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை பெற்றோர்கள் தமது பிள்ளைகள் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும் ஆக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். அந்தக் கனவு தவறு என்றோ, குறை என்றோ கூறவில்லை. அந்தக் கனவை அடைய முடியாதவர்கள் அடுத்ததாக தமது வாழ்க்கைக்கான தொழல் தகைமையைப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகளை நோக்கிப் பயணிக்க வேண்டும்.

அரசு தற்போது பல்வேறு வழிகளில் தொழில் நுட்பக் கற்கைகளான என்.வி.கியூ. திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

தொழில் தகைமைக்கும் கல்வித் தகைமைக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. பல்கலைக்கழக பட்டங்கள் பலவும் எமக்கு தொழில் தகைமையைத் தருவதில்லை. கல்வித் தகைமையோடு தொழில் வாய்ப்பைத் தேடுவது கடினம். பல்கலைக்கழக பட்டங்களைப் பெற்றவர்கள் அரசிடம் மட்டுமே வேலைவாய்ப்பைக் கோர முடியும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கைத்தொழில் புரட்சி காரணமாக பல வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்கின்றன. நாம் அதில் தொழில் வாய்ப்பைப் பெறுவதானால் தொழில் தகைமை அவசியம்.

எனவே நாம் அனைவருமே கல்வித் தகைமையோடு தொழில் தகைமையையும் கொண்டிருக்க வேண்டும்.- என்றார்.



# கடற்பாசி, கடலட்டை பண்ணை தொடர்பில் கலந்துரையாடல்

(அ.அஸ்வர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடலட்டை பண்ணை தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (16) வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மாவட்ட செயலாளர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சரியான முகாமைத்துவத்தின் கீழ் சட்ட ரீதியான மீன்பிடி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் ஆரம்பகட்டமாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது மீன்பிடி செயற்பாடுகளை மேம்படுத்தல், களப்பு முகாமைத்துவ குழுக்களை அமைத்தல், கடற்பாசி வளர்ப்பு உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தப் பகுதிகள் தொடர்பில் துறைசார்ந்த திணைக்களங்களின் திட்டமிடலைத் தொடர்ந்து, மாவட்டத்தின் சங்கப் பிரதிநிதிகளுடன் அடுத்த கட்ட கலந்துரையாடலை மேற்கொள்வதெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் இணைப்பாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகள், மீனவ சங்கத்தினர் கலந்து கொண்டனர்.




# முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரிக்கு கதிரைகளை வழங்கியது சஹாரா நிதியம்

(ஹஸ்பர்)

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியின் அதிபர் எம். மன்சூர் அலியின் வேண்டுகோளுக்கு அமைவாக ராபிதா நளீமிய்யீன் பழைய மாணவர் அமைப்பு திருகோணமலை மாவட்ட பிராந்திய கிளை ஏற்பாட்டில் சஹாரா நிதியத்தின் அனுசரனையுடன் முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரிக்கு ஒரு தொகை கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன.




முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியின் அதிபர் எம். மன்சூர் அலி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. நசூஹர்கான், விசேட அதிதியாக முள்ளிப்பொத்தானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.கே.நசூர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுச் செயலாளர் முன்னால் பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ. நிகாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ராபிதா நளீமிய்யீன் பழைய மாணவர் அமைப்பின் திருகோணமலை மாவட்ட பிராந்திய கிளை தலைவர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். தாரிக அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் , அஷ்ஷெய்க் ஏ.ஆர். சஜீத் (நளீமி), அஷ்ஷெய்க் ஏ.ஜீ.எம். பஹீ, அஷ்ஷெய்க் எம்.எஸ். எம். அஸ்மீர், அஷ்ஷெய்க் எம்.யூ. இம்தியாஸ், அஷ்ஷெய்க் எம்.கே. இஹ்ஸான் மற்றும் ஆசிரியர் எச். எம்.ஹனீஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சங்கிலி அறுத்தவர் மாட்டினார்!

(எஸ். நிதர்ஷன்)

சாவகச்சேரிப் பொலிஸாரின் துரித நடவடிக்கை மூலம் பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்த திருட்டுச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். திருட்டுப் பொருள் மற்றும் திருட்டுக்குப் பயன் படுத்திய மோட்டார் சைக்கிள் ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கச்சாய் வீதிப் பகுதியில் கடந்த 06 ஆம் திகதி நண்பகல் தனது பிள்ளைகளை பாடசாலையில் இருந்து ஏற்றிவரச் சென்ற பெண் ஒருவருடைய மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு பவுண் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேக நபர் அறுத்துச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனை அடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் சி.சி. ரி.வி. கமராவை அடிப்படையாக



கொண்டு கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியைச் சேர்ந்த 22வயதான இளைஞன் ஒருவரை கடந்த 14ஆம் திகதி கைது செய்தனர். அறுக்கப்பட்ட சங்கிலி, திருட்டுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், திருட்டு தினத்தன்று அணிந்திருந்த உடை ஆகியவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபரை கடந்த 14 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை அவரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பாலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக நேற்று புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்!

(ரஸீன் ரஸ்மின்)

பாலஸ்தீன் மக்களுக்கு எதிராக இஸ்ரேலியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொடூரத் தாக்குதல் மற்றும் இனப் படுகொலை என்பவற்றை கண்டித்து புத்தளத்தில் நேற்று ஜும்ஆ தொழுகைக்கு பின்னர் பாரிய கண்டன ஆர்ப் பாட்டமும், பேரணியும் இடம்பெற்றன.

புத்தளம் – கொழும்பு பிரதான வீதியில் உள்ள கொழும்பு முகத்திடலுக்கு முன்பாக இந்தக் கண்டன பேரணி இடம்பெற்றது.

நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையை நிறைவு செய்த பின் புத்தளம் பெரிய பள்ளிக்கு முன்பாக ஒன்று கூடிய புத்தளம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பொது மக்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் புத்தளம் பெரிய பள்ளிக்கு முன்பாக இருந்து கொழும்பு முகத்திடல்வரை கோஷங்களகயும் எழுப்பியவாறு பேரணியாகச் சென்றனர்.

புத்தளம் பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் புத்தளம் கிளை மற்றும் புத்தளம் அரசியல் தலைமைகளின் வழிகாட்டலில் பலஸ்தீன சுதந்திரத்துக்கான புத்தளம் மக்கள் அமைப்பால் இந்த கண்டன பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த பேரணியில் புத்தளம் – கரைத் தீவு வீதி, புத்தளம் – மதுரங்குளி வீதி, பாலாவி – கற்பிட்டி ஆகிய வீதிகளில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களையும் சேர்ந்த மஸ்ஜித் நிர்வாகிகள், உலமாக் கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதி கள், அரசியல் பிரமுகர்கள், மதரஸா மாணவ, மாணவிகள், சிறுவர்கள், வயோதிபர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, இஸ்ரேலின் மனிதாபி மானமற்ற நடவடிக்கைகளை வன்மையாக கண்டித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், “உலக நாடுகளே, அடிப்படைத் தேவை மறுக்கப்பட்ட பலஸ்தீனத்தை காப்பாற்று”, “ வைத்தியசாலைகள் மீது குண்டுகள் வீசி அழிப்பதுதானா உன்னுடைய கோழைத்தனம்” , “பலஸ்தீனமே நற் செய்தியை பெற்றுக்கொள், வேத வாக்கு பெற்றுக்கொள்” இதுபோன்ற இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட சுலோகங்களையும், பதாதைகளையும் ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளியிட டனர்.





## ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான கைதிகள்

# ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் இருவரின் மனுக்கள் மீதும் பதில் வழங்க உத்தரவு

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலையான இருவர் தங்களை அகதிகள் முகாமிலிருந்து விடுவிக்கக் கோரிய மனுக்கள் தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை, தமிழக அரசு ஆகிய தரப்புகள்பதிலளிக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற பி. ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் கடந்த ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். இதையடுத்து, இவர்கள் இருவரும் திருச்சி கொட்டப்பட்டில் உள்ள அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டனர். இந்த நிலையில், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய இருவரும் தங்களை அகதிகள் முகாமிலிருந்து விடுவிக்கக் கோரி, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தனித் தனியாக மனுக்களை தாக்கல் செய்தனர்.

இதில் முகாமிலிருந்து தன்னை விடுவித்து நெதர்லாந்தில் உள்ள தனது குடும்பத்துடன் சேர்ந்து வாழ அனுமதிக்க வேண்டும் என ராபர்ட் பயஸும், சென்னையில் உள்ள தனது குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ அனுமதிக்க வேண்டும் என ஜெயக்குமாரும் கோரியிருந்தனர்.

இந்த இரு மனுக்களும் உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தன. அப்போது, ஜெயக்குமார் மனு தொடர்பாக தமிழக அரசு பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை வருகிற 21ஆம் திகதிக்கும், ராபர்ட் பயஸ் மனு தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை வருகிற 27ஆம் திகதிக்கும் நீதிபதி ஒத்திவைத்தார்.

மேலும், ராபர்ட் பயஸ் நெதர்லாந்தில் வாழ அனுமதி கோருவதால், அவரது வழக்கில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தை எதிர் மனுதாரராக சேர்க்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

# ‘மிதிலி’ புயல் வங்கதேசம் அருகே நேற்று மாலை கரையைக் கடந்தது

மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம், மேலும் வலுப்பெற்று புயலாக உருவாகக்கூடும் என இந்திய வானிலை மையம் தெரிவித்து இருந்தது.

அதன்படி, வங்கக்கடலில் நிலவி வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் ‘மிதிலி’ புயலாக வலுப்பெற்றது. மேலும் இந்த புயலானது வடக்கு-வடகிழக்கு திசையில் நகர்ந்து வங்க தேசத்தின் மோங்கா, கொபுரா கடற்கரை இடையே கரையை கடக்கும் என்றும், கரையை கடக்கும்போது மணிக்கு 60-70 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என்றும் வானிலை ஆய்வுமையம் தெரிவித்தது.



இந்த நிலையில், நேற்று பிற்பகலில் கரையை கடக்கத்தொடங்கிய மிதிலி புயல், 20 கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து வங்கதேசம் அருகே இரவுக்குள் கரையைக் கடந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புயல் கரையை கடக்கும்போது பலத்த காற்று வீசியதுடன், கடலோர பகுதிகளில் கனமழை பெய்தது. கரையைக் கடந்த மிதிலி புயல், வடக்கு- வடகிழக்கு திசையில் நகர்ந்து திரிபுரா மற்றும் வங்கதேசம் இடையே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்தது.




### 45 விஞ்ஞானிகள் 12 தொன் பொருள்களுடன்

# அண்டார்டிகாவின் பனி ஓடுபாதையில் தரை இறங்கியது ‘போயிங்’ விமானம்!

பனியால் சூழப்பட்டுள்ள அண்டார்டிகா கண்டம் மனிதர்கள் வசிக்க முடியாத நிலப்பரப்பாகும். எனவே, ஆய்வுக்காக மட்டுமே இந்த பகுதியை பயன்படுத்தி வருகிறார்கள். பல லட்சம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த உயிரினங்கள், தாவரங்களின் படிமங்கள் இங்கு பத்திரமாக பாதுகாக்கப்படுன்றன. இதை ஆய்வு செய்வதற்காக பல்வேறு நாடுகளின் விஞ்ஞானிகள் இங்கு தங்கியிருக்கின்றனர். அவர்களுக்கு தேவையான பொருள்களை வெளியில் இருந்து தான் கொண்டு செல்ல வேண்டும். அவர்களை அங்கு அழைத்து செல்லவும் திரும்ப கொண்டு வரவும் பெரும்பாலும் இராணுவ விமானங்களையே பயன்படுத்துகிறார்கள்.

இந்நிலையில் பனிசூழ்ந்த அண்டார்டிகாவில் பயணிகள் விமானம் ஒன்று தரையிறங்கி உலக சாதனை படைத்திருக்கிறது. நார்ஸ் அட்லாண்டிக் ஏர் வேஸ் விமான நிறுவனத்தின் போயிங் 787 ட்ரீம்லைனர் விமானத்தை கடந்த 15 ஆம் திகதி அண்டார்டிகாவின் குயின் மவுட் லேண்ட் எனும் இடத்தில் விமானிகள் தரையிறக்கி சாதனை படைத்துள்ளனர்.

நோர்வே நாட்டிலிருந்து நோர்வே போலார் இன்ஸ்டிடியூட் விஞ்ஞானிகள் உள்பட 45 விஞ்ஞானிகள் மற்றும் ஆய்வுக்கு தேவையான பொருள்கள், மருந்துப் பொருள்கள், உணவு என 12 டன் எடையுள்ள பொருள்களுடன் புறப்பட்ட இந்த விமானம், தென் ஆப்பிரிக்காவின் கேப்டவுனில் தரையிறங்கி எரிபொருளை நிரப்பியது. பின்னர் அங்கிருந்து புறப்பட்டு அண்டார்டிகாவில் தரையிறங்கியுள்ளது.

விமானம் தரையிறங்கிய நீல பனி ஓடுபாதையானது கிட்டத்தட்ட 2 மைல் நீளம் (3கி.மீ.) மற்றும் 200 அடி அகலம் கொண்டது. இது வழக்கமான ஓடுபாதை போன்று காணப்பட்டாலும், பனிக்கட்டி என்பதால் விமானத்தை தரையிறக்குவது சவாலான பணி. கட்டுப்பாட்டை இழந்தால் சறுக்கிக்கொண்டு பாதையைவிட்டு விலகிவிமானம்விபத்துக்குள்ளாகிவிடும். இந்தச் சவாலான சூழ்நிலைக்கு மத்தியில், பத்திரமாக விமானத்தை தரையிறக்கியிருக்கிறார்கள்.

அண்டார்டிகாவில் கடற்கரையிலிருந்து சுமார் 150 மைல் (235 கி.மீ.) தொலைவில் உள்ள குயின் மவுட் லேண்டில் உள்ள ஜ“டுல்செசன் என்ற இடத்தில் நோர்வே போலார் இன்ஸ்டிடியூட்டின் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# காசாவில் ஹமாஸ் எங்கு இருந்தாலும் தாக்குதல் நடக்கும் என்கிறது இஸ்ரேல்



பலஸ்தீனத்துக்கு எதிரான யுத்தத்தில் பலஸ்தீனத்தின் காசாமுனைக்குள் நுழைந்த இஸ்ரேல் படையினர் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் பதுங்கு குழிகளை கண்டுபிடித்து அழித்து வருகின்றனர்.

இதனிடையே, போர் இன்று 43 ஆவது நாளாக நீடித்து வருகிறது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலில் இதுவரை 1,200 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாலஸ்தீனத்தின் காசா முனை மீது இஸ்ரேல் நடத்தி வரும் தரைவழி, வான்வழி தாக்குதலில் 11 ஆயிரத்து 470க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும், போர் தீவிரமடைந்து வரும் நிலையில் காசாவில் உள்ள முக்கிய மருத்துவமனைகளுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த சில நாள்களாக ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பான விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

அதேபோல், பாலஸ்தீனத்தின் மேற்கு கரை பகுதியில் நடந்த மோதலில் இதுவரை 191 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12 ஆயிரத்து 850ஐ கடந்துள்ளது.

இந்நிலையில், காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் எங்கு இருந்தாலும் தாக்குதல் நடத்தப்படும் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

காசா முனையில் உள்ள கான்யூனிஸ் நகரில் இருந்து மக்கள் பாதுகாப்பான பகுதிக்கு வெளியேறும்படி இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

“எங்கள் இராணுவ நடவடிக்கையை மேலும் முன்னெடுத்து செல்வதில் உறுதியாக உள்ளோம். தெற்கு காசா பகுதி உள்பட ஹமாஸ் ஆயுதக்குழுவினர் எங்கு இருந்தாலும் தாக்குதல் நடத்தப்படும்” -என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.